தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-12-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் மாநில அளவில் வாசகர்கள் கண்டறியும் வண்ணம் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மகளிர்க்கான சுயவேலை வாய்ப்பை மேம்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் தொழில் நுட்பங்களை அளித்து வருவதோடு மகளிர்களுக்கு சுயதொழில் துவங்குவதற்கான வேளாண் சார்ந்த தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்க உள்ளது. கோவை மற்றும் மதுரையில் 25 நாட்களுக்கு உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சிகள் தமிழகத்தின் சிறு மற்றும் குறுந்தொழில் வளர்ச்சித் துறையின் நிதி உதவியோடு நடைபெற உள்ளது.

“அடுமனைப் பொருட்கள் மற்றும் மிட்டாய் வகைகள் தயாரித்தல்” பற்றிய பயிற்சி கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தில் வரும் 13-12-2013 முதலும், மதுரையிலுள்ள மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல்" பற்றிய பயிற்சி 16-12-13 முதலும் "மதிப்பூட்டப்பட்ட சிறுதானிய உணவுகள் தயாரித்தல்" பற்றிய பயிற்சி 23-12-13 முதலும் நடைபெற உள்ளது. இப்பயிற்சிகளில் இந்த உணவுப் பொருட்களை தயாரிப்பது பற்றிய தொழில் நுட்பங்கள் மட்டுமல்லாமல், தொழிற்சாலை துவங்குவதற்குரிய நிர்வாகம் மற்றும் மேம்பாட்டுத் திறன்கள், நிதி மேலாண்மை, வங்கி நிதியுதவி பெறுவதற்கான திட்ட வரைவு தயாரித்தல் பற்றியும் பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சிகளில் கலந்து கொள்ள கட்டணம் கிடையாது. பயனாளிகள் தங்கும் வசதியை அவர்களே செய்து கொள்ள வேண்டும். இப்பயிற்சியில் பங்கு பெற குறைந்தபட்ச கல்வித் தகுதியாக மேல்நிலைப் பள்ளி (+2) முடித்திருக்க வேண்டும். பட்டப்படிப்பு முடித்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இப்பயிற்சியில் பங்குபெற்ற பயனாளிகள், தொழில் துவங்குவதற்கான சிறந்த திட்ட வரைவு வைத்திருந்தால் அவர்களை மாவட்ட தொழில் மையம் அல்லது வங்கிகள் மூலம் நிதியுதவி பெற பரிந்துரைக்கப்படுவர்.

அடுமனைப் பொருட்கள் மற்றும் மிட்டாய்கள் தயாரித்தல் குறித்த பயிற்சியில் பங்கு பெற ஆர்வமுள்ள பெண்கள், பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம்,

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோவை, 0422-6611268, 6611340 (மின்அஞ்சல் : phtc@tnau.ac.in) என்ற முகவரியில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளவும்.

மேலும் மதுரையில் நடைபெற உள்ள பயிற்சியில் பங்கு பெற, முதல்வர், மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தொலைபேசி 04252 -2422956, 2423433, 2422633 (மின் அஞ்சல் deanhscmdu@tnau.ac.in) என்ற முகவரியில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளவும்.

பெயர் பதிவு செய்ய விரும்புவோர் 5-12-2013க்குள் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தொடர்பு அலுவலர்